சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.07.12.2024
OS.No. 430/2018
PW 1 : சரோஜா (வயது 60 ) க/பெ. ஜெகநாதன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

எனது கணவர் பெயர் ஜெகநாதன், அவரது தம்பி தான் 1 ஆம் பிரதிவாதி சேகர் என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் நடேசன். அவரது வேலை நெசவு கூலி வேலை தான். அவரது கூலி வேலைக்கான சம்பளம் அவரது வாழ்வாதாரத்திற்கே போதுமானதாக உள்ளது, அதை தவிர அவருக்கு வேறு வருமானம் இல்லை என்றால் சரிதான். வழக்கு பிராதுக்கான விவரங்களை வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன். வழக்கு பிராது 6வது பாராவில் வாதியின் மாமனார் மற்றும் மாமியார் சுய வருமானத்தை கொண்டு, அடியிற்கண்ட சொத்தை வாங்கினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் அது தவறானது. ஆரம்பத்தில் பதட்டத்தில் நான் ஏதோ சொல்லியிருக்கலாம். தாவா சொத்து 3,4 பிரதிவாதிகளான ஸ்ரீ அம்பலவான பண்டார மடத்தின் சொத்து என்றால் சரிதான் அது ஆதினம் என்று சொல்வார்கள். ஆதினம் என்று எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கூறுவது போல் தாவா சொத்து ஆதினத்திற்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பிலாவது தாவா சொத்து ஆதீனத்திற்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்தில் 5 x 10 அளவிலான இடத்தில் எனது மாமனார் குடிசை வீடு கட்டி குடியிருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி வீடு நாளடைவில் இடிந்துவிட்டது என்றால் சரியல்ல. அதை மறு சீரமைப்பதற்கு கூட எனது மாமனாரிடம் வசதி இல்லை என்றால் சரியல்ல, வீடு கட்டி தான் குடியிருக்கிறோம். எனக்கு 1982 ல் திருமணம் ஆனது. திருமணம் ஆன உடன் நான் எனது கணவருடன் தனி குடித்தனம் சென்றுவிட்டேன் என்றால் பிரச்சனை ஏற்பட்டதால் ஓரிரு மாதங்கள் தனியாக இருந்தோம், பின்பு ஒன்றாக வந்துவிட்டோம். நான்

தனிகுடித்தனம் சென்றுவிட்டேன் என்றும் நான் கூறுவது போல் ஒன்றாக சேர்ந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் நடேசனுக்கு எனது கணவர் ஜெகநாதன், 1 ஆம் பிரதிவாதி சேகர் மற்றும் 3 பெண் பிள்ளைகளான வசந்தா, இந்திராணி, சம்பூரணம் ஆகிய வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது நாத்தனார்களை வழக்கில் தரப்பினர்களான சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளோம். நான் வழக்கில் நாத்தனார்களை தரப்பினர்களான சேர்க்கவில்லை என்றும், வழக்கிற்காக சேர்த்ததாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆன உடன் நான் எனது குடும்பத்துடன் தனியாக சென்றுவிட்டேன் என்றாலும், தாவா சொத்தில் எனது நாத்தனார்கள், மாமனார் மாமியாருடன் 1 ஆம் பிரதிவாதியும் ஒன்றாக இருந்தார்கள் என்றாலும் சரியல்ல.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/

சரோஜா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

சார்பு நீதிபதி
இலால்குடி